வேளாண்துறை மற்றும் விவசாய நலத்துறை

கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகம்

தாவரவியல் பூங்கா, புதுவை

----

எண்; 10/ கூ.வே.இ.(தோ.க.)/பூங்கா/ 2018-2019 தேதி **04-02-2019**

## <u>ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏல அறிவிப்பு</u>

புதுவை, மதகடிப்பட்டு அரசு பழத்தோட்டம் மற்றும் புதுவை தாவரவியல் பூங்கா, புதுவைக்கு சொந்தமான மரங்களில் காய்கனி மகசூல் அனுபவ உரிமத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகளை கோருவதற்கான **கடைசி நாள்** 22.02.2019 **மதியம் 1.00 மணி வரை, அன்றைய தினமே மாலை 3.30 மணியளவில் மகசூல் ஏலம் நடைபெறும்.** ஒப்பந்த படிவங்கள் மேற்கண்ட அலுவலகத்தில் ரொக்கம் **ரூ.100/-(+) GST @ 5%** மட்டும் (திருப்பித்தரப்பட மாட்டாது) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மற்றும் <u>http://agri.puducherry.gov.in</u> என்ற இணையதளத்திலும் ஒப்பந்த படிவங்களை பதிவிறக்கம் செய்து ரூபாய் நூறு **(+) GST @ 5%** க்கான காசோலையை (திருப்பித்தரப்பட மாட்டாது) கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை), புதுச்சேரி (அல்லது) The Additional Director of Agriculture (Horticulture), Puducherry என்று குறிப்பிட்டு இந்த ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து கடைசி தேதிக்குள் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

| வ. எண் | மரங்களின் விபரம் | எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | அ.ப.தோ | தா.பு. |
| **1** | இலவம் பஞ்சு மரம் | 78 | 35 |
| **2** | சப்போட்டா மரம் | 112 | - |
| **3** | தென்னை மரம் | 57 | 90 |
| **4** | கொய்யா மரம் | 25 | - |
| **5** | மா மரம் | 343 | 78 |
| **6** | புளிய மரம் | 58 | 48 |
| **7** | செர்ரி | 40 | - |
| **8** | பலா மரம் | 10 | - |
| **9** | முந்திரி மரம் | 8 | - |
| **10** | நெல்லி மரம் | 42 | - |
| **11** | சீத்தா மரம் | 45 | - |

கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை)

தாவரவியல் பூங்கா, புதுவை.

வேளாண்துறை மற்றும் விவசாய நலத்துறை
கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகம்
தாவரவியல் பூங்கா, புதுவை
----

எண்:10/கூ.வே.இ.(தோ.க.)/2018-2019 தேதி : **04-02-2019**

ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏல அறிவிப்பு

புதுவை, மதகடிப்பட்டு அரசு பழத்தோட்டம் மற்றும் புதுவை தாவரவியல் பூங்கா, புதுவைக்கு சொந்தமான மரங்களில் காய்கனி மகசூல் அனுபவ உரிமத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகளை கோருவதற்கான கடைசி நாள் 22.02.2019 மதியம் 1.00 மணி வரை **அன்றையதினமே மாலை 3.30 மணியளவில்** வருகை தந்த நபர்களின் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் யாவும் பிரிக்கப்பட்டு மகசூல் ஏலம் நடைபெறும். ஒப்பந்த படிவங்கள் மேற்கண்ட அலுவலகத்தில் ரூ.100/- **(+) GST @ 5%** மட்டும் (திருப்பித்தரப்பட மாட்டாது) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மற்றும் **http://agri.puducherry.gov.in** என்ற இணையதளத்திலும் ஒப்பந்த படிவங்களை பதிவிறக்கம் செய்து ரூபாய் நூறு **(+) GST @ 5%** க்கான காசோலையை (திருப்பித்தரப்பட மாட்டாது) கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை), புதுச்சேரி (அல்லது) The Additional Director of Agriculture (Horticulture), Puducherry என்று குறிப்பிட்டு இந்த ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து கடைசி தேதிக்குள் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்;

1. புதுவை, மதகடிப்பட்டு அரசு பழத்தோட்டம் மற்றும் புதுவை தாவரவியல் பூங்கா, புதுவைக்கு சொந்தமான மரங்களில் காய்கனி மகசூல் அனுபவ உரிமத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகளை அரக்கினால் மூடி முத்திரையிடப்பட்ட தனித்தனி உரையின் மீது பெயரை குறிப்பிட்டு கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை), புதுவை-1, என்ற முகவரிக்கு **22.02.2019** மதியம் 1.00 மணி முன்பாக வந்து சேருமாறு அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு அனுப்பி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் யாவும் **அன்றையதினமே மாலை 3.30** மணிக்கு வருகை தந்த நபர்களின் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் யாவும் பிரிக்கப்பட்டு மகசூல் ஏலம் நிர்ணயம் செய்யப்படும்.

2. ஏலத்தில் பங்கு பெறும் ஒப்பந்ததாரர்கள் புதுவை, மதகடிப்பட்டு அரசு பழத்தோட்டத்திற்காக **ரூ.10,000/-** (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) முன் வைப்புத்தொகையாக **(E.M.D.) / தாவரவியல் பூங்கா, புதுவைக்காக ரூ.5,000/-** ((ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) முன் வைப்புத்தொகையாக (E.M.D.) கேட்பு வரைவோலையை **(Demand Draft)** கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை), புதுச்சேரி The Additional Director of Agriculture (Horticulture), Puducherry என்று குறிப்பிட்டு இந்த ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து சமர்பிக்க வேண்டும்.

DEPARTMENT OF AGRICULTURE
http://agri.puducherry.gov.in

3. **மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேதி மற்றும் நேரத்திற்குப் பின்வரும் ஒப்பந்தப் புள்ளிகள் யாவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

4. ஒப்பந்த / ஏல விற்பனை முடிந்தவுடன் வெற்றி பெறாத நபர்களின் முன்காப்புத் தொகை திருப்பித் தரப்படும். ஒப்பந்த முடிந்தவுடன் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் அன்றைய தினமே முழு தொகையை உடனடியாக செலுத்தவேண்டும், அவ்வாறு செலுத்த தவறினால் அவர் செலுத்திய முன்வைப்புத் தொகையை இழக்க நேரிடும்.

5. ஒப்பந்த / ஏல விற்பனை முடிந்தவுடன் குத்தகை விடப்பட்ட மரங்களின் பாதுகாப்புப் பற்றி இந்த அலுவலகம் எந்தவிதமான பொறுப்பும் ஏற்காது.

6. ஒப்பந்த / ஏல விற்பனை முடிந்தவுடன் குத்தகை விடப்பட்ட மரங்களின் தரம் மற்றும் அதன் மதிப்புப் பற்றி இந்த அலுவலகம் எந்தவிதமான பொறுப்பும் ஏற்காது.

7. ஒப்பந்தப்புள்ளியைப் பெறுவதற்கான காலக்கெடு முடிவடைந்த பின்பும், ஒப்பந்த முடிவை அறிவித்த பின்பும், அதனைத் திரும்பப் பெறுவது ஏற்க இயலாது.

8. எக்காரணத்தைக் கொண்டும் பசுமையான தென்னை மட்டைகளையோ, இதர மரங்களின் கிளைகளையோ வெட்டக்கூடாது.

9. குத்தகைதாரர் மரங்களுக்குத் தாங்களே காவல் போட்டுக்கொள்ள வேண்டும். வேளாண் அலுவலரின் ஒப்புதலோடு அதிகபட்சமாக 5 காவலாளர்களை வைத்துக்கொள்ளலாம். அவர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டை ஒன்றை அலுவலகத்தில் சமர்பிக்கவேண்டும்.

10. மேலே குறிப்பிட்டுள்ள மரங்களை அரசினால் வெட்ட நேரிட்டால், அது சமயம் குத்தகைதாரர் மறுப்பு ஏதும் கூறாமல் மரங்களை வெட்ட அனுமதிக்க வேண்டும்.

11. அவ்வாறு வெட்டப்படும் மரங்களுக்கு ஈட்டுத்தொகை ஏதும் வழங்கப்படமாட்டாது.

12. குத்தகையைக் குறிப்பிட்ட காலத்திற்குள் தானாகவே ரத்து செய்ய நேர்ந்தால் அதனால் ஏற்படும் இழப்பிற்கு அரசு பொறுப்பு ஏற்காது.

13. குத்தகைக் காலம் முடிவடைந்ததும் எல்லா மரங்களையும் நல்ல நிலையிலேயே திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

**14. ஏலம் எடுத்தவர் மகசூலை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வேளாண் அலுவலரின் அனுமதி பெற்று எடுத்துச் செல்லவேண்டும்.**

15. ஏலத்தில் கலந்துகொள்ள விரும்புவோர் குத்தகைக்கு விடப்படும் மரங்களை வேளாண் அலுவலரின் அனுமதியோடு அலுவலக நாட்களில் பார்வையிடலாம்.

16. இந்த ஏலம் சம்பந்தமாக கீழே கையொப்பமிட்டுள்ளவரின் முடிவே இறுதியானது. யாதொரு காரணமும் கூறாமல் எந்த ஓர் ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு முழு உரிமை உண்டு.

புதுச்சேரி அரசு வேளாண் துறை
DEPARTMENT OF AGRICULTURE
http://agri.puducherry.gov.in/

17. இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் நட்டத்திற்கு அரசு பொறுப்பேற்காது.

18. அரசு சட்ட விதிகளுக்கு முரனான நடவடிக்கைகள் ஏதேனும் அரசு பழத்தோட்டம், மதகடிப்பட்டு மற்றும் தாவரவியல் பூங்கா, புதுச்சேரி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப் படுவதாக தகவல் வருமேயானால் இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு அவர் செலுத்திய அனைத்து தொகையும் இழக்க நேரிடும் மற்றும் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

19. ஏலத்தில் பங்கேற்பவர்களின் மீது ஏலம் நடைபெறுவதற்கு முன் அல்லது பின் அவர்களின் மீது சமூக விரோத செயல்களில் ஈடுபட்டவராக தெரிய வந்தால் எந்த ஒரு முன் அறிவிப்பும் இன்றி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். மேலும் அவர் செலுத்திய அனைத்து தொகையும் இழக்க நேரிடும்.

20. ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் ஒப்பந்தப் படிவத்துடன் கீழ் காணும் ஏதேனும் அரசு ஆதார சான்றிதழ் நகல் ஒன்றை கட்டாயம் இணைக்க வேண்டும். இவைகள் இணைக்கப்படாத ஒப்பந்தப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

1. ஆதார் அட்டை
2. வாக்காளர் அடையாள அட்டை
3. ஓட்டுனர் உரிமம்.

மதகடிப்பட்டு அரசு பழத்தோட்டம்

| வ. எண். | மரங்களின் விபரம் | எண்ணிக்கை | மகசூல் அனுபவிக்கும் காலம் |
|---|---|---|---|
| 1. | இலவம் பஞ்சு மரம் | 78 ✓ | 31.06.2019 வரை |
| 2. | சப்போட்டா மரம் | 112 ✓ | 27.12.2019 வரை |
| 3. | தென்னை மரம் | 57 ✓ | 27.12.2019 வரை |
| 4. | கொய்யா மரம் | 25 ✓ | 27.12.2019 வரை |
| 5. | மா மரம் | 343 ✓ | 30.08.2019 வரை |
| 6. | புளிய மரம் | 58 ✓ | 27.12.2019 வரை |
| 7. | சொ்ரி | 40 ✓ | 27.12.2019 வரை |
| 8. | பலா மரம் | 10 ✓ | 31.10.2019 வரை |
| 9. | முந்திரி மரம் | 8 ✓ | 30.11.2019 வரை |
| 10. | நெல்லி மரம் | 42 ✓ | 27.12.2019 வரை |
| 11. | சீத்தா மரம் | 45 ✓ | 30.11.2019 வரை |

புதுவை தாவரவியல் பூங்கா

| வ. எண். | மரங்களின் விபரம் | எண்ணிக்கை | மகசூல் அனுபவிக்கும் காலம் |
|---|---|---|---|
| 1. | தென்னை மரம் | 90 ✓ | 27.12.2019 வரை |
| 2. | மா மரம் | 78 ✓ | 30-08-2019 வரை |
| 3. | புளிய மரம் | 48 ✓ | 27.12.2019 வரை |
| 4. | இலவம் பஞ்சு மரம் | 35 ✓ | 30.6.2019 வரை |

கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை)
தாவரவியல் பூங்கா, புதுச்சேரி.

புதுவை அரசு
வேளாண் துறை மற்றும் விவசாய நலத்துறை
கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகம்
தாவரவியல் பூங்கா, புதுவை

----

எண்;10/கூ.வே.இ.(தோ.க.)/2018-19 தேதி;

# ஒ ப் ப ந் த ப் ப டி வ ம்

## அரசு பழத்தோட்டம், மதகடிப்பட்டு

பெறுநர்;-

கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை.),
தாவரவியல் பூங்கா,
புதுவை.

அ

| வ. எண். | மரங்களின் விபரம் | எண்ணிக்கை | மகசூல் அனுபவிக்கும் காலம் | ஏலம் கோரும் தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | சப்போட்டா மரம் | 112 | 27.12.2019 வரை | |
| 2. | தென்னை மரம் | 57 | 27.12.2019 வரை | |
| 3. | கொய்யா மரம் | 25 | 27.12.2019 வரை | |
| 4. | மா மரம் | 343 | 30-08-2019 வரை | |
| 5. | புளிய மரம் | 58 | 27.12.2019 வரை | |
| 6. | செர்ரி | 40 | 27.12.2019 வரை | |
| 7. | பலா மரம் | 10 | 31.10.2019 வரை | |
| 8. | முந்திரி மரம் | 8 | 30-11-2019 வரை | |
| 9. | நெல்லி மரம் | 42 | 27.12.2019 வரை | |
| 10. | சீத்தா மரம்ா | 45 | 30-11-2019 வரை | |

ஆ

| வ. எண். | மரங்களின் விபரம் | எண்ணிக்கை | மகசூல் அனுபவிக்கும் காலம் | ஏலம் கோரும் தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | இலவம் பஞ்சு மரம | 78 | 31-06-2019 வரை | |

இணைப்பு;-
கேட்பு வரைவோலை தொகை (ரூபாய்)-----------எண்-----------: தேதி -------------வங்கி

ஒப்பந்ததாரரின் கையொப்பம்
பெயர், முகவரி மற்றும் அலை பேசி எண்.

புதுவை அரசு

வேளாண் துறை மற்றும் விவசாய நலத்துறை

கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகம்

தாவரவியல் பூங்கா, புதுவை

----

எண்;10/கூ.வே.இ.(தோ.க.)/2018-19 தேதி;

# ஒ ப் ப ந் த ப் ப டி வ ம்

## தாவரவியல் பூங்கா

பெறுநர்;-

கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை.),

தாவரவியல் பூங்கா, புதுவை.

அ

| வ. எண். | மரங்களின் விபரம் | எண்ணிக்கை | மகசூல் அனுபவிக்கும் காலம் | ஏலம் கோரும் தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | தென்னை மரம் | 90 | 27.12.2019 வரை | |
| 2. | மா மரம் | 78 | 30-08-2019 வரை | |
| 3. | புளிய மரம் | 48 | 27.12.2019 வரை | |

ஆ

| வ. எண். | மரங்களின் விபரம் | எண்ணிக்கை | மகசூல் அனுபவிக்கும் காலம் | ஏலம் கோரும் தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | இலவம் பஞ்சு மரம் | 35 | 30.6.2019 வரை | |

இணைப்பு;-

கேட்பு வரைவோலை தொகை (ரூபாய்)-----------எண்-----------: தேதி ------------வங்கி

ஒப்பந்ததாரரின் கையொப்பம்

பெயர், முகவரி மற்றும் அலை பேசி எண்.